Individual copy

## சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி - கருணை அடிப்படை பணிநியமனம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – இராமநாதபுரம் மாவட்டம் – பணியில் இருக்கும் போது காலமான அரசு ஊழியர் திரு.ச.தாமரைக்கனி என்பவரின் மனைவி திருமதி.எம்.குஷ்பு, இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ3) துறை

அரசாணை (4ப) எண்.43

நாள் : 28.06.2019
விகாரி, ஆனி 13,
திருவள்ளுவர் ஆண்டு– 2050

படிக்கப்பட்டவை:

1. இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் செயல்முறை எண்.வ3/474/2018, நாள் 04.06.2018.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், கடிதம் எண்.71276/2018/டி1, நாள் 26.02.2019.

*****

## ஆணை:

பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம் என்பதன் அடிப்படையில், இராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து 11.07.2017 அன்று காலமான திரு.ச.தாமரைக்கனி என்பவரின் மனைவி திருமதி.எம்.குஷ்பு என்பவருக்கு மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி கருணை அடிப்படையில், இராமநாதபுரம் மாவட்டத்தில் இளநிலை உதவியாளராகத் நற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் 05.06.2018 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். மறைந்த அரசு ஊழியர் பணிவரன்முறை செய்யப்பட்ட பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும், அவரது மனைவி திருமதி.எம்.குஷ்பு என்பவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 01.12.2017அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 03.04.1998 என்றும், அரசு ஊழியர் இறந்த நாளில் தனியரின் வயது 19 என்றும், பணி நியமன நாளில் தனியரின் வயது 20 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை என்றும் தெரிவித்து மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசுக்கு முன்மொழிவு அனுப்பியுள்ளார்.